**MINUTES OF THE PUBLIC HEARING MEETING CONDUCTED FOR THE PORPOSED ROUGH STONE AND GRAVEL QUARRY IN PATTA LAND OF**

i) **M/S. N. KANNIYAPPAN AT S.F.NO. 277/1A, 277/1B, 277/1C, 277/1D, 277/1E, 277/1F, 277/2 & 280/2, OVER AN EXTENT OF 3.11.50 HECTARES,**

ii) **M/S. S.RAJENDRAN AT S.F.NO. 275 / 1B, 275/2A, 238/1A, 238/1B, 238/1C, 238/1D OVER AN EXTENT OF 3.35.5, HECTARES TO BE CARRIED OUT IN CLUSTER AT SIRUDHAMUR VILLAGE, UTHIRAMERUR TALUK, KANCHEEPURAM DISTRICT, TAMIL NADUON 23.06.2023**

| | |
|---|---|
| Name of Project: | Proposed rough stone and gravel quarries of<br>i) M/s.N.Kanniyappan rough stone and gravel quarry at S.F No. 277/1A, 277/1B, 277/1C, 277/1D, 277/1E, 277/1F, 277/2 & 280/2, over an extent of 3.11.50 Hectares,<br>ii) M/s.S.Raajendran rough stone and gravel quarry at S.F No. 275 / 1B, 275/2A, 238/1A, 238/1B, 238/1C, 238/1D, over an extent of 3.35.5Hectares, Siruthamur Village, Uthramerur Taluk, Kanchipuram District. |
| Venue: | M/s. R.R.K.Mahal,<br>No. 167- Thirumukoodal,<br>Thirumukoodal – Pinaiyur Road,<br>Uthiramerur Taluk, Kanchipuram District. |
| Date and Time: | 23.06.2023 11:30 A.M |
| Participants: | 1. Thiru.M.Narayanan,<br>District Revenue Officer (L.A), National Highway, Kanchipuram Kanchipuram District.<br><br>2. Er.K.Prakash, M.Tech.,<br>District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Sriperumbudur, Kancheepuram District. |

At the outset, the District Environment Engineer, Tamil Nadu Pollution Control Board, Sriperumbudur welcomed the District Revenue Officer, Kancheepuram District, other Government Officials, Publics, Social &Environmental activists for the Public Hearing and informed that the proposed stone and gravel quarry ofM/s.N.Kanniyappan rough stone and gravel quarry at S.F No. 277/1A, 277/1B, 277/1C, 277/1D, 277/1E, 277/1F, 277/2 & 280/2, over an extent of 3.11.50 Hectares, M/s.S.Raajendran rough stone and gravel quarry at S.F No. 275 / 1B, 275/2A, 238/1A, 238/1B, 238/1C, 238/1D, over an extent of 3.35.5 Hectares, Siruthamur Village, Uthramerur Taluk, Kanchipuram Districthave approached State Level Environmental Impact Assessment Authority-TN seeking Environmental Clearance for the proposed rough stone and gravel quarries in cluster. In this regard, SEIAA-TN has issued Terms of Reference (TOR) subject to one of the condition that Public Hearing shall be conducted and address the concerns raised during the public hearing to SEIAA-TN.Based on that, the public hearing was arranged on today 23.06.2023 after getting approval from the District Collector, Kancheepuram District and public notice has been published as mandated in the newspaper namely "The New Times of India" (English)& "Dhinakaran (Tamil)" on 16.05.2023.

On behalf of project proponents the Project Consultant will give power point presentation about the said proposed projects. After that the public present here canexpress their views, concerns andquestions if any by indicating their name and village name from where he /she belongs to and the same will be recorded.

Project consultant Thiru.M.Vijay prabhu explained about the detailed report of the proposed project through a power point presentation.

The views, concerns and questions of the public and the clarification from the project proponent are detailed below.

| S.No | Name and Village | Views/Comments |
|---|---|---|
| 1 | Mr. Ramaraj- Arungunram | Road and bus facilities to be provided. As there is only one bus, it is difficult for the school students to commute the school regularly. we request you to provide bus facility. |
| 2 | Mr. Sivaraman- Arungunram. | Trucks required to limit the speed slow down Local people are not getting employment lorries should not be operated during school opening times between 8 and 10 a.m. Requested to control the speed, as the lorries are moving at a dangerous speed in the public area. They are giving employment to outside people but no employment to the locals. |
| 3 | Mr. Loganathan, Siruthamur | Requested to provide water facilities for the villages and to maintain the Lakes. We are not going to affect due to establishment of quarries. |
| 4 | Mr. Divahar Siruthamur | Cement roads should be laid on road bends. To rectify Water problem, road problem and bus problem. He ask to slow down the speed of trucks during the school time and requested to set up speed brakers at important places on the roads. Requested to provide wire fencing around the operational and abandoned quarries. |
| 5 | Mr. Prema Kutty, Ex. President, Siruthamur | Requested to provide road facility and land course way in the Palar river. |

| | | |
|---|---|---|
| | Panchayat | Requested to use separate the road for lorries without entering the village<br>Instruct the quarry owners to follow the rules. |
| 6 | Mr. Kamalakannan<br>Siruthamur | Requested to provide a separate well for drinking water<br>Requested to provide separate road for lorries so that lorries do not enter the town |
| 7 | Mr. Manimaran<br>Guduvancheri/ Contractor | As there is a need for construction materials, we requested for permission to quarrying as soon as possible.<br>Construction of check dams will benefit the public.<br>Permission for more quarries will be given soon |
| 8 | Mr. Rajasekhar Sirudamur | There is no objection due to quarrying<br>School buildings should be maintained<br>Lakes should be maintained<br>Cameras should be installed in important places<br>Truck drivers should be advised to slow down |
| 9 | Ms. Tamilarasi | This panchayat is having high income, but no development. There is no development in the villages. But there is a quarry for twenty years and there is no development here. This panchayat is big panchayat, but everyone is daily wages.<br>Does anyone seem to accept the day-to-day needs of the schools?<br>The number of quarries is increasing but the village is not developed.<br>Everything will have to be bought with a struggle.<br>The quarry has been there for twenty years but |

| | | |
|---|---|---|
| | | there is no income. The village is not progressing, we are going backwards. No one goes to a better job. We are still laborers.<br>It is not a matter of pride that you donate for a temple festival, you should do something that makes you proud, that is also your pride.<br>There are still students who do not go to college after completing twelfth. There are students who do not go to school and college due to lack of bus facilities and road facilities, only one bus comes and no other bus comes.<br>As always,I will keep saying this village will go well for six months and go back to its old ways. |

The public hearing meeting was concluded with thanks to the District Revenue Officer, Kancheepuram District, Officials, Public and NGO's and also informed to the public that the proceedings (audio and video recording) of the meeting along with the hard copy of the minutes of the meeting will be sent to the State Environment Impact Assessment Authority (SEIAA-TN), Chennai.

The list of participants, audio and video recording, representation received on stage during meeting in original with photographs of the Public hearing meeting are enclosed herewith.

**District Environmental Engineer,**
**TNPCB, Sriperumbudur,**
**Kancheepuram District**

**Competent Authority/**
**District Revenue Officer (L.A),**
**National Highway, Kanchipuram**
**Kanchipuram District.**

**காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் வட்டம், சிறுதாமூர் கிராமம்,**

i) **புல எண் 277/1A, 277/1B, 277/1C, 277/1D, 277/1E, 277/1F, 277/2 & 280/2 பரப்பளவு – 3.11.50 ஹெக்டர் திரு.N.கண்ணியப்பன் சாதாரண கல் மற்றும் கிராவல் சுரங்கம்.**

ii) **புல எண் 275/1B, 275/2A, 238/1A, 238/1B, 238/1C & 238/1D பரப்பளவு 3.35.50 ஹெக்டர் திரு.S..ராஜேந்திரன் சாதாரண கல் மற்றும் கிராவல் சுரங்கம்.**

**குழுமங்கள் குறித்த சுற்றுச்சூழல் அனுமதி பெறுதல் தொடர்பாக 23.06.2023 அன்று நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்ட நடவடிக்கையின் விபரங்கள்.**

| | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் வட்டம், சிறுதாமூர் கிராமம்,<br>i) புல எண் 277/1A, 277/1B, 277/1C, 277/1D, 277/1E, 277/1F, 277/2 & 280/2 பரப்பளவு – 3.11.50 ஹெக்டர் திரு.N.கண்ணியப்பன் சாதாரண கல் மற்றும் கிராவல் சுரங்கம்.<br>ii) புல எண் 275/1B, 275/2A, 238/1A, 238/1B, 238/1C & 238/1D பரப்பளவு 3.35.50 ஹெக்டர் திரு.S..ராஜேந்திரன் சாதாரண கல் மற்றும் கிராவல் சுரங்கம் |
| இடம் | M/s.R.R.K.மஹால், 167–திருமுக்கூடல், திருமுக்கூடல் – பினையூர் சாலை, உத்திரமேரூர் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம். |
| நாள் மற்றும் நேரம் | 23.06.2023 காலை 11.30 மணி |
| பங்குபெற்றோர் | 1. திரு. மா. நாராயணன்,<br>மாவட்ட வருவாய் அலுவலர், (நி.எ)<br>தேசிய நெடுஞ்சாலை, காஞ்சிபுரம்<br>காஞ்சிபுரம் மாவட்டம்.<br><br>2. திரு. கு. பிரகாஷ்,<br>மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருப்பெரும்புதூர், காஞ்சிபுரம் மாவட்டம். |

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருப்பெரும்புதூர் அவர்கள், இக்கருத்து கேட்பு கூட்டத்திற்கு தலைமை ஏற்று நடத்தித்தர வருகைதந்துள்ள மாவட்ட வருவாய் அலுவலர், காஞ்சிபுரம் மாவட்டம், அவர்களையும் மற்றும் ஏனைய அரசுத்துறை அதிகாரிகள், பொதுமக்கள் மற்றும் தன்னார்வலர்கள் ஆகியோர் அனைவரையும் வரவேற்றார். காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் வட்டம், சிறுதாமூர் கிராமம், புல எண் 277/1A, 277/1B, 277/1C, 277/1E, 277/1F, 277/2 & 280/2 பரப்பளவு – 3.11.50 ஹெக்டர், திரு.N.கண்ணியப்பன் சாதாரண கல் மற்றும் கிராவல் சுரங்கம் (ii) புல எண் 275/1B, 275/2A, 238/1A, 238/1B, 238/1C & 238/1D பரப்பளவு 3.35.50 ஹெக்டர், திரு.S..ராஜேந்திரன் சாதாரண கல் மற்றும் கிராவல் சுரங்கம், கல் மற்றும் கிராவல் எடுப்பதற்கு சுற்றுச்சூழல் அனுமதி வேண்டி மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தில் விண்ணப்பித்து TOR (Terms of Reference) என்கின்ற

வரையறைகளை பெற்றுள்ளது. சுற்றுச்சூழல் மதிப்பீட்டு குழுவின்07.03.2022 மற்றும் 07.03.2023 தேதியிட்ட குறிப்பு விதிமுறை கடிதத்தின் அடிப்படையில், சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை தயாரித்து பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடத்த கேட்டுக்கொண்டதின் அடிப்படையில் அதற்கான அறிவிப்பு 16.05.2023 அன்று **"தினகரன்"** என்கிற தமிழ் நாளிதழிலும் மற்றும் **"தி டைம்ஸ் ஆப் இந்தியா"** என்ற ஆங்கில நாளிதழிலும் வெளியிடப்பட்டு இன்று 23.06.2023 இல் இப்பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது என்பதை எடுத்துரைத்தார்.

இதனையடுத்து இத்திட்டம் தொடர்பான விரிவான விளக்கங்கள் மற்றும் சுற்றுச்சூழல் தாக்கத்தினை இத்திட்ட ஆலோசகர் திரு. M. விஜய் பிரபு பொதுமக்களுக்கு எடுத்துரைத்தார்..

அதன் பின்பு மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள், பொதுமக்களிடம் இந்த திட்டத்தைப் பற்றி தங்களது கருத்துக்கள் கேள்விகள், விளக்கங்கள் ஏதும் தேவையிருப்பின் அமைதியான முறையில் தங்களது பெயரையும் ஊரையும் குறிப்பிட்டு தெரியப்படுத்தலாம் என குறிப்பிட்டார். மேலும் அவர் கூறுகையில் தாங்கள் கூறுகின்ற அனைத்து கருத்துக்களும் ஒலி மற்றும் ஒளி பதிவு செய்யப்படும் எனவும், எழுத்துப்பூர்வமாகவும் தங்களது கருத்துக்களை மனுவாகவும் கொடுக்கலாம் என கூறினார். இதை தொடர்ந்து கருத்துக் கேட்பு கூட்டத்தில் கலந்து கொண்ட பொதுமக்கள் தங்களது கருத்துக்களை பின்வருமாறு தெரிவித்தார்கள்.

<u>பொது மக்களின் கருத்து மற்றும் கோரிக்கைகள்</u>

| வ. எண் | பெயர் மற்றும் கிராமம் | கருத்து மற்றும் கோரிக்கைகள் |
|---|---|---|
| 1 | திரு. ராமராஜ்– அருங்குன்றம். | ♦ சாலை மற்றும் பேருந்து வசதிகள் செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறோம்<br>♦ ஒரே பேருந்துள்ளதால் பள்ளி மாணவர்களுக்கு சிரமமாக உள்ளது பேருந்து வசதி செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறோம் |
| 2 | திரு.சிவராமன்– அருங்குன்றம். | ♦ லாரிகள் வேகத்தை குறைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்<br>♦ உள்ளூர் மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கவில்லை பள்ளி செல்லும் நேரம் மற்றும் 8 மணி முதல் 10 மணி வரை லாரிகள் சொல்லக் கூடாது. லாரிகள் பொதுமக்களை அச்சுறுத்தும் வேகத்தில் செல்வதால் வேகத்தை கட்டுப்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம். வெளியூர் ஆட்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கிறார்கள் ஆனால் உள்ளூர் மக்களுக்கு வேலைவாய்ப்பு இல்லை. |
| 3 | திரு. லோகநாதன், சிறுதாமூர் | ♦ தண்ணீர் வசதியும், ஏரிகளை பராமரித்து தருமாறும் கேட்டுக்கொள்கிறோம் மற்றும் குவாரிகள் வருவதால் எங்களுக்கு எந்த பாதிப்பும் இல்லை. |
| 4 | திரு.திவாஹர் சிறுதாமூர் | ♦ சாலை வளைவுகளில் சிமெண்ட் சாலைகள் அமைத்து தர வேண்டும்<br>♦ தண்ணீர் பிரச்சனை, சாலை பிரச்சனை, பேருந்து பிரச்சினை சரிசெய்து தருமாறுகேட்டுக்கொள்கிறோம்<br>♦ பள்ளி குழந்தைகள் செல்லும் நேரத்தில் லாரிகளின் |

| | | |
|---|---|---|
| | | வேகத்தை குறைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம் சாலைகளின் முக்கியமான இடங்களில் வேகத்தடைகள் அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறோம்<br>♦ முடிவடைந்த மற்றும் தற்போது இயங்கி வரும் குவாரிகளை சுற்றியும் கம்பி வேலிகள் அமைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம் |
| 5 | திரு.பிரேமா குட்டி, சிறுதாமூர் ஊராட்சி மன்ற முன்னால் தலைவர், | ♦ சாலை வசதியும், தரைபாலம் அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறோம்<br>♦ ஊருக்குள் லாரிகள் வராத அளவிற்கு ஒரு வழி உள்ளது அதனை பின்பற்றுமாறு தாழ்ந்த பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்<br>♦ விதிமுறைகளை பின்பற்றி நடக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் |
| 6 | திரு. கமலக்கண்ணன் சிறுதாமூர் | ♦ குடிநீருக்கு கிணறு வசதி செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறோம்<br>♦ லாரிகள் ஊருக்குள் வராமல் இருக்க வேறுபாதை அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறோம் |
| 7 | திரு.மணிமாறன் கூடுவாஞ்சேரி/ ஒப்பந்ததாரர் | ♦ கட்டுமானபொருட்களின் தேவை இருப்பதனால் குவாரி விரைவில் அனுமதி தருமாறு கேட்டுக்கொள்கிறோம்<br>♦ பொதுமக்களின் தேவைகளும் தீர்த்து வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்<br>♦ தடுப்பணைகட்டுவது மூலமாக பொதுமக்களுக்கு நன்மை ஏற்படும் மேலும் குவாரிகளுக்கு விரைவில் அனுமதி தருமாரு கேட்டுக்கொள்கிறோம் |
| 8 | திரு. ராஜசேகர் சிறுதாமூர் | ♦ குவாரிவருவதனால் எந்த ஆட்சேபனையும்இல்லை<br>♦ பள்ளிகட்டிடங்களை பராமரிக்க வேண்டும்<br>♦ ஏரிகளை பராமரிக்க வேண்டும்<br>♦ முக்கிய இடங்களில் கேமராக்கள் பொருத்த வேண்டும்<br>♦ லாரி ஓட்டுனர்களை மெதுவாக செல்ல அறிவுருத்த வேண்டும் |
| 9 | திருமதி.தமிழரசி அருகுன்றம் | ♦ வருமானம் அதிகம் வரும் பஞ்சாயத்து ஆனால் வளர்ச்சி இல்லை.<br>♦ கிராமங்களில் வளர்ச்சி உள்ளன ஆனால் இருபது வருடமாக குவாரி உள்ளது இங்கு எந்த வளர்ச்சியும் இல்லை, இந்த பஞ்சாயத்து தான் பெரிய பஞ்சாயத்து ஆனால் எல்லோரும் கூலி வேலை தான் பார்க்கிறார்கள்.<br>♦ பள்ளிகளின் அன்றாட தேவைகளை ஏற்றுக்கொள்வது போல் யாரேனும் செய்கிறீர்களா<br>♦ குவாரி எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டிருக்கிறது ஆனால் கிராமம் வளர்ச்சியை சந்திக்கவில்லை.<br>♦ எல்லாவற்றையும் போராடியே வாங்க வேண்டியதாகவே தான் இருக்கின்றது.<br>♦ இருபது வருடமாக குவாரி இருக்குன்னு சொல்றாங்க ஆனா வருமானம் எதுவும் இல்லை. கிராமமானது முன்னேறவில்லை. பின்னோக்கிய சென்று கொண்டிருக்கிறோம். யாரும் சிறந்த வேலைக்கு செல்லவில்லை. இன்னும் கூலி தொழிலாளிகளாகவே உள்ளோம். |

| | | |
|---|---|---|
| | | ♦ நீங்கள் கோவில் திருவிழாவிற்காக நன்கொடைகள் அளிப்பது பெருமை அல்ல நீங்கள் பெருமைப்படும் அளவிற்கு ஏதேனும் செய்ய வேண்டும் அதுதான் உங்களுக்கும் பெருமை.<br>♦ பன்னிரண்டாவது முடித்துவிட்டு கல்லூரி செல்லாத மாணவர்கள் இன்னும் நிறைய பேர் உள்ளனர். பேருந்து வசதியும் சாலை வசதி இல்லாத காரணத்தினால் பள்ளி மற்றும் கல்லூரிக்கு செல்லாத மாணவர்களும் உள்ளனர் ஒரே ஒரு பேருந்து மட்டும் வருகிறது அதை தவிர வேற எந்த பேருந்தும் வருவதில்லை.<br>♦ எப்போதும் போல் நான் சொல்லிக்கொண்டே தான் இருப்பேன் ஆறுமாதங்களுக்கு நன்றாக நடக்கும் மீண்டும் பழைய நிலைக்குத் திரும்பும் இந்த கிராமம்<br>♦ 20 வருடங்கள் குவாரி பராமரிக்கும் நீங்கள் உங்கள் பெயர் சொல்லும் அளவிற்கு நடந்து கொள்ளுங்கள் வாய்ப்பு அளித்ததற்கு நன்றி. |

இதையடுத்து பொதுமக்கள் எவரும் கருத்துக்கள் கூற முன்வராத பட்சத்தில் இப்பொதுமக்களின் கருத்து கேட்பு கூட்டத்தை முடிவுக்கு கொண்டுவரும் விதமாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் கூட்டத்திற்கு தலைமை ஏற்று நடத்தி தந்த மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களுக்கும், ஏனைய அரசுதுறை அலுவலர்கள், பொதுமக்கள் மற்றும் சமுக ஆர்வலர்கள் அனைவருக்கும் நன்றியினை தெரிவித்துக் கொண்டு இந்த கருத்து கேட்பு கூட்டத்தில் பொதுமக்கள் பதிவு செய்த கருத்துக்கள் முழுமையாக ஒலி மற்றும் ஒளி பதிவு செய்யப்பட்டு மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாறுபாடு அமைச்சகத்திற்கு அனுப்பப்படும் என்று கூறி கருத்துக் கேட்பு கூட்டத்தை நிறைவு செய்தார்.

இப்பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் கலந்து கொண்ட பொதுமக்களின் பட்டியல் மற்றும் கூட்ட முடிவில் நேரடியாக பெற்ற மனுக்கள் அனைத்தும் இத்துடன் இணைப்பாக இணைக்கப்பட்டுள்ளது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

தகுதிவாய்ந்த அலுவலர் /
மாவட்ட வருவாய் அலுவலர், (நி.எ)
தேசிய நெடுஞ்சாலை,
காஞ்சிபுரம்.